THE HINDU
Region



No Out Patient Department services in Jipmer on Nov. 15

The Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer) here has decided to close the Out Patient Departments on November 15 on account of the Central government holiday for Guru Nanak's birth anniversary. The Institute appealed to patients not to visit the hospital on the closed holiday announced for OPD units. However, emergency services will function without any interruption, a communication from the hospital said.

இந்து தமிழ் திசை 4 CHENNAI சனி, நவம்பர் 9, 2024

ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் பிரிவு நவ. 15-ம் தேதி இயங்காது

● புதுச்சேரி

புதுச்சேரி ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மத்திய அரசின் விடுமுறை தினமான வரும் 15-ம் தேதி குருநானக் ஜெயந்தியை முன்னிட்டு ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது. எனவே இந்தத் தேதியில் நோயாளிகள் வெளிப்புற சிகிச்சைப் பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
9.11.2024 (சனிக்கிழமை)

குருநானக் ஜெயந்தியையொட்டி

ஜிப்மரில் வெளிப்புற சிகிச்சை பிரிவு 15-ந்தேதி இயங்காது

புதுச்சேரி, நவ.9–

புதுவை கோரிமேட்டில் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஜிப்மர் ஆஸ்பத்திரி உள்ளது. இங்கு தேசிய விடுமுறை நாட்களில் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது. அதன்படி வருகிற 15–ந் தேதி குருநானக் ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி புதுவை ஜிப்மர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், 'வருகிற 15–ந் தேதி குருநானக் ஜெயந்தி தினமாகும். இதை முன்னிட்டு ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது என்பதால் அன்றைய தினம் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அதேபோல் அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்
புதுச்சேரி | சனி | 9.11.2024

ஜிப்மர் மருத்துவமனை 15ம் தேதி விடுமுறை

புதுச்சேரி, நவ. 9–

குருநானக் ஜெயந்தியை யொட்டி வரும் 15ம் தேதி ஜிப்மர் மருத்துவமனை இயங்காது என அறிவிக் கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர் வால் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

வரும் 15ம் தேதி குரு நானக் ஜெயந்தி. மத்திய அரசு விடுமுறை தினமான அன்று, ஜிப்மர் மருத்துவ மனையில் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு இயங்காது. எனவே அன்று, நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை பிரி வுக்கு வருவதை தவிர்க்க வேண்டும்.

இருப்பினும் அவசர பிரிவு சேவைகள் அனைத் தும் வழக்கம்போல் இயங் கும். இவ்வாறு செய்திக்கு றிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்
நவம்பர் 9, 2024 சனிக்கிழமை

குருநானக் ஜெயந்தியை முன்னிட்டு

15ம் தேதி ஜிப்மரில் வெளிப்புற சிகிச்சை பிரிவு இயங்காது

புதுச்சேரி, நவ. 9: ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மத்திய அரசு விடுமுறை தினமான வருகிற 15ம் தேதி அன்று குருநானக் ஜெயந்தியை முன்னிட்டு ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு இயங்காது. எனவே, இந்த தேதியில் நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனினும் அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினகரன்
நவம்பர் 9, 2024 சனிக்கிழமை

ஜிப்மரில்

பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கு தரவரிசை பட்டியல் வெளியீடு

புதுச்சேரி, நவ. 9: புதுச்சேரி ஜிப்மரில் பிஎஸ்சி நர்சிங் மற்றும் அலைடு ஹெல்த் சயின்ஸ் படிப்புகளுக்கான தரவரிசை பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

புதுச்சேரி ஜிப்மரில் பிஎஸ்சி நர்சிங் படிப்பில் பெண்கள்-85, ஆண்கள்-9 என 94 இடங்களும், பிஎஸ்சி அலைடு ஹெல்த் சயின்ஸ் பாடப்பிரிவுகள்-87 இடங்களும் என மொத்தமாக 181 இடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கான மாணவர் சேர்க்கை ஆண்டுதோறும் நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் நிரப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் 2024-25ம் கல்வி ஆண்டு பிஎஸ்சி நர்சிங் மற்றும் பிஎஸ்சி அலைடு ஹெல்த் சயின்ஸ் பாடப்பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு ஜிப்மர் இணையதளத்தில் கடந்த அக்.3ம் தேதி முதல் அக்.24ம் தேதி மாலை 4 மணி வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இதற்கு நாடு முழுவதிலும் இருந்து நீட் தேர்வில் தகுதி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு www.jipmer.edu.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்தனர்.

இதையடுத்து, பிஎஸ்சி நர்சிங் மற்றும் அலைடு ஹெல்த் சயின்ஸ் படிப்புக்கான தரவரிசை பட்டியல் ஜிப்மர் இணையதளத்தில் நேற்று வெளியிடப்பட்டது. இப்பட்டியலில் 2,739 மாணவ, மாணவிகள் இடம் பெற்றுள்ளனர். அகில இந்திய அளவில் மாணவர் அஸ்லா அப்துல்லா, மாணவி டிஜி, மாணவி அன்னா லியாஸ் ஆகியோர் 650 மதிப்பெண்களுடன் முதல் 3 இடங்களை பிடித்துள்ளனர்.

புதுச்சேரி அளவிலான பொதுப்பிரிவில் மாணவி பாத்திமா நேஹா ரீம் 551 மதிப்பெண்களுடன் முதல் இடத்தையும், மாணவர் சாய் விஷ்ணு வரதன் 507 மதிப்பெண்களுடன் 2வது இடத்தையும், மாணவி சக்தி ரூபினி 502 மதிப்பெண்களுடன் 3வது இடத்தையும் பிடித்துள்ளனர்.